Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.297/2022** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW3** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | வேதராஜ் |
| Father/Husband Name | : | ஞானதீபம் |
| Village | : | பொட்டகவயல் |
| Taluk | : | பரமக்குடி |
| Calling | : | டிரைவர் |
| Religion | : | |
| Age | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2025.

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் பரமக்குடி தாலுகா தேவிப்பட்டினம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பொட்டகவயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். டிரைவராக இருந்து வருகிறேன். அ.சா.1, 2 சாட்சிகளை தெரியும்,. பக்கத்து வீட்டுக்காரர்கள். சாட்சிகள் சிங்காரவேல், ஜெயராணி, பாலக்குமார் ஆகியோர்களை தெரியும். பக்கத்து வீட்டுக்காரர்கள். ஆஜர் எதிரி அர்ஜுனனை தெரியும். என் எதிர் வீட்டுக்காரர். இறந்துபோன கர்ணனை தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஆடி 1ம் தேதி இரவு 08.30 மணியளவில் எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் முன்பு நான், இறந்துபோன கர்ணன், சாட்சி

சிங்காரவேலு ஆகியோர் படுத்திருந்தோம். அப்போது இறந்த கர்ணன் தெற்கே கால்நீட்டி படுத்திருந்தார். அப்போது ஆஜர் எதிரி கோவிலுக்கு பின் பகுதியில் இருந்து வந்து கோவிலில் பொங்கல் வைப்பதற்காக அடுப்பு கூட்டும் முண்டுகல்லை தூக்கி அட கர்ணா இங்குதான் படுத்திருக்கிறியா உன்னைத்தான் தேடிவந்தேன் என்று சொல்லி தலையில் போட்டார். அத்துடன் எதிரி சென்றுவிட்டார். அந்த சம்பவத்தை என்னுடன் சிங்காரவேலு, இறந்துபோன கர்ணனின் மனைவி பஞ்சவர்ணம், மகன் தவஸ்குமார் ஆகியோர் பார்த்தனர். உடனே நாங்கள் பொட்டகவயல் பள்ளிவாசலுக்கு சொந்தமான ஆம்புலன்ஸில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். நான் மருத்துவமனைக்கு உடன் செல்லவில்லை. சிகிச்சைக்கு சேர்த்த கொஞ்ச நேரத்தில் கர்ணன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

எனக்கு சொந்த ஊர் பொட்டகவயலுக்கு பக்கத்தில் உள்ள வாகவயல். நான் படித்தது, ஆட்டோ ஓட்டியது பொட்டகவயலில்தான். பிறகு திருமணமானது முதல் பொட்டகவயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன கர்ணனின் மனைவி பஞ்சவர்ணம் எனக்கு என்ன உறவு என்றால் பங்காளி உறவுமுறை. நான் எந்த ஊரில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டி வந்தேன் என்றால் சென்னையில் ஊருக்கு வரும்போது பொட்டகவயல் பஸ்ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுவேன். நான் எத்தனை மணிக்கு ஆட்டோ ஓட்ட சென்று எத்தனை மணிக்கு வீடு திரும்புவேன் என்றால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. நான் ஓட்டும் பொட்டகவயல் ஆட்டோ நிறுத்ததில் எத்தனை ஆட்டோக்கள் இருக்கும் என்றால் 15 ஆட்டோக்கள். பொட்டகவல் ஆட்டோ நிறுத்ததிற்கும் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மாரியம்மன் கோவிலுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ஒரு கிலோ மீட்டர். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் ஆட்டோவை எங்கு நிறுத்தியிருந்தேன் என்றால் நான் பொட்டகவயல் ஆட்டோ நிறுத்ததில். நான் ஆட்டோ நிறுத்தும் இடத்தில் யாருடன் இருந்தேன் என்றால் சம்பவம் நடந்த நேரத்தில் நான் ஆட்டோ ஓட்ட செல்லவில்லை. சம்பவ தினத்தன்று நான் என் ஆட்டோவை வேறு ஒருவருக்கு ஓட்ட கொடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மாரியம்மன் கோவிலுக்கும் இறந்த நபரின் வீட்டிற்கும்

எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 15 மீட்டர் இருக்கும். மாரியம்மன் கோவிலின் தலைவாசல் வடக்கு திசை நோக்கி உள்ளது. மாரியம்மன் கோவிலின் எந்த திசையில் சம்பவ தினத்தன்று தூங்கி இருந்தேன் என்றால் கிழக்கு. கிழக்குப்பக்கம் நானும், சிங்காரவேலுவும் படுத்திருந்தோம். நான் படுத்திருந்த இடத்திற்கும் கர்ணன் படுத்திருந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10 மீட்டர். நான் எதிரியை சம்பவ இடத்தில் பார்ப்பதற்கு முன்பு ஓடிவிட்டார் என்றால் சரியல்ல, நான் பார்த்த பின்பு தான் எதிரி ஓடினார். போலிசார் என்னை விசாரிக்கும்போது நான் பார்த்த பிறகுதான் எதிரி ஓடினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். இறந்த கர்ணன் படுத்துக்கொண்டிருந்த இடத்திற்கு எந்த திசையில் கல் கிடந்தது என்றால் மேற்கு திசை. அந்த இடத்தில் எத்தனை பொங்கல் வைக்கும் வகையில் கற்கல் கிடந்தது என்றால் நிறைய கிடந்தது. எதிரி எத்தனை கல்லை தூக்கி போட்டார் என்றால் ஒருகல்தான். அந்த கல் கரிபிடித்த கல்லா கரி பிடிக்காத கல்லா என்றால் இரவு நேரம் என்பதால் நான் அதை கவனிக்கவில்லை. இறந்த கர்ணனுக்கு உடம்பில் எந்த பகுதியில் காயம் ஏற்பட்டது என்றால் தலையில் காயம் ஏற்பட்டது. தலையில் எந்த பகுதியில் என்றால் தெரியாது. இறந்த கர்ணன் ஒருகளித்து படுத்திருந்தாரா, குப்புற படுத்திருந்தாரா அல்லது மல்லாக்க படுத்திருந்தாரா என்றால் ஒருகளித்து படுத்திருந்தார். போலிசார் என்னை விசாரிக்கும்போது கர்ணன் ஒருகளித்து படுத்திருந்தார் என்றுதான் சொன்னேனா என்றால் ஆமாம். வழக்கு சம்பவம் நடந்த எவ்வளவு நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு பஞ்சவர்ணமும், தவஷ்குமாரும் வந்தார்கள் என்றால் 2 நிமிடத்தில் வந்தார்கள். பஞ்சவர்ணமும், தவஷ்குமாரும் நான் சத்தம்போட்டு கேட்டு வந்தார்களா அல்லது இறந்த கர்ணன் சத்தம்போட்டதால் வந்தார்களா என்றால் அவர்கள் எதார்த்தமாக கர்ணனை தேடிவந்தபோது சம்பவம் நடந்தது. பஞ்சவர்ணமும், தவஷ்குமாரும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வரும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் 08.30 இருக்கும். வழக்கு சம்பவம் நடைபெற்று எவ்வளவு நேரம் கழித்து, யார் சொன்னதின்பேரில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் திருநாவுக்கரசு என்பவருக்கு பஞ்சவர்ணம் போன் மூலம் தகவல் சொல்லி திருநாவுக்கரசு புகார் கொடுத்துள்ளார். வழக்கு சம்பவம் நடந்த பின்பு அந்த இடத்தில் சுமார் எத்தனை நபர்கள் கூடினார்கள் என்றால் சுமார் 50 நபர்கள் கூடியிருப்பார்கள். கர்ணனை போலிசார்

மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்களா அல்லது பஞ்சவர்ணம், தவஷ்குமார் ஆகீயோர் கூட்டிச்சென்றார்களா என்றால் பஞ்சவர்ணம் ஆம்புலன்ஸில் கூட்டிச் சென்றார். மாரியம்மன் கோவிலில் இருந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு தூக்கி செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 09.00 – 10.00 மணி இருக்கும். வழக்கு சம்பவம் நடைபெற்ற போது மணி சரியாக எத்தனை இருக்கும் என்றால் இரவு 08.30. வழக்கு சம்பவம் நடைபெற்ற நேரமும், இடமும் இருட்டான நேரம் என்றால் சரிதான். வழக்கில் பயன்படுத்தியதாக சொல்லப்படும் கல் சம்பவ இடத்திலேயே கிடந்ததா, போலிசார் வந்து எடுத்துச்சென்றார்களா என்றால் ஆமாம். சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து போலிசார் சம்பவ இடத்திற்கு கல்லை எடுத்துச் சென்றார்கள் என்றால் தெரியாது. சம்பவ தினத்தன்று கர்ணன் என்ன ஆடை அணிந்திருந்தார் என்றால் தெரியாது. அருகாமையில் படுத்திருந்தவர்களின் ஆடைகளில் இரத்தம்பட்டது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. என்னை யார் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மறுநாள் காலையில் சம்பவம் நடந்த இடத்தில் வைத்து உதவி ஆய்வாளர் விசாரித்தார். சம்பவத்திற்கு பயன்படுத்திய கல்லில் ரத்தம் படியவில்லை என்றால் நான் பார்க்கவில்லை. அசா.1 பஞ்சவர்ணம் என் உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் குறித்து யார் புகார் கொடுத்தது என்றால் கர்ணனின் மனைவி மற்றும் மனைவியின் சகோதரர் திருநாவுக்கரசு. புகார் மனுவில் யார் கையெழுத்து போட்டது என்று எனக்கு தெரியாது. திருநாவுக்கரசு போட்டாரா என்பது எனக்கு தெரியாது.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.